1984 மார்ச் 16]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு அரசு வேதாரண்யம் சதுப்பு நிலப் பரப்பினை அதன் இயற்கை தன்மை கெடாதவாறு உபயோகிக்கும் பொருட்டு திரு. பி. விஜயராகவன், இ.ஆ.ப. தலைமையில் எட்டு உறுப்பினர்கள் அடங்கிய குழுவை அமைத்துள்ளது.

(இ) வேதாரண்யம் சதுப்பு நிலப்பரப்பில் உப்பு உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பம்பாய் இயற்கை வரலாற்று சங்கம் (Bombay Natural History Society) ஒரு அறிக்கையினை தந்துள்ளது. இவ்வறிக்கையின்படி அதிராமபட்டினத்திற்கும், முத்துப்பேட்டைக்கும் இடையிலுள்ள 11,652 ஏக்கர்களும், வடக்கில் நீண்ட நிலப்பரப்பு பகுதியில் 22,138 ஏக்கராவும் அதாவது வடக்கு முல்லிப்பள்ளம் ஆற்றுக்கால் பகுதியும், சிறுத்தலைக்காடு ஆற்றுப் பகுதியும் உப்பு உற்பத்திக்கு அப்பாற்பட்ட நிலமாக கருதப்பட வேண்டியுள்ளது. அதிராமபட்டினத்திற்கும், முத்துப்பேட்டைக்கும் இடையே உள்ள பகுதியில்தான் தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் உப்பளம் அமைந்துள்ளது. குழுவின் தலைவரான திரு. பி. விஜயராகவன், இ.ஆ.ப. அவர்களும் பம்பாய் இயற்கை வரலாற்று சங்கத்திற்காக அறிக்கை தயாரித்த திரு. நீலகண்டன் அவர்களும் கூட்டாக இந்த இடங்களைப் பார்வையிட்ட பின் வடக்கு பகுதியில் உள்ள முல்லிப்பள்ளம், சிறுதலைக்காடு ஆற்றுக்கால் பகுதியும் உப்புத் தொழிற்சாலைகள் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தக் கூடாது என்ற கருத்தைத் தெரிவித்தனர். இல்லையெனில், இது பறவைகளின் இயற்கை இருப்பிடங்களைப் பாதிக்கும். வடக்கிலிருந்து செல்லும் இயற்கை நீரோட்டத்திற்குத் தடை விளைவிப்பதால் மற்ற இடங்களிலுள்ள உயிரின வாழ்க்கைச் சூழ்நிலைப் பாதித்து பறவைகளின் ஒருங்கிணைப்பிற்கு பாதிப்பு உண்டாகும் எனக் கூறியுள்ளது. இக் கருத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழகத்திலுள்ள நீதித்துறை மாவட்டங்கள்.

339—

(*வினா எண். 21736)—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை நீதித்துறை மாவட்டங்கள் (Judicial Districts) உள்ளன?

(ஆ) அவைகளை அதிகரிக்கும் உத்தேசமுள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) தமிழகத்தில் 17 நீதித்துறை மாவட்டங்கள் உள்ளன.

(ஆ) ஆம்.

திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது நீதித்துறை மாவட்டங்களை அதிகரிக்கும் யோசனை இருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை மாவட்டங்களில் இப்படி அதிகரிக்கும் யோசனையை அரசு நடைமுறைப் படுத்த உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, முதற்கண் நீலகிரி மாவட்டத்திற்கு என தனியாக ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்கவேண்டும் என்று அரசு முடிவு செய்து இருக்கிறது, நெல்லை மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கக்கூடிய செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது, இது விரைவில் முடிவுக்கு வரும்.

திரு. எம். சின்னசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது புதிதாக மாவட்டங்களின் பிரிவினை அறிவிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்தப் புதிய மாவட்டங்களை பிரிக்கிறபோது, ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு நீதித்துறை மாவட்டத்தையும் ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, பொதுமக்களின் நலன் கருதி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் இருப்பதுதான் உகந்தது. அந்த அடிப்படையில் அரசு அந்தக் கருத்தை ஆராய்ந்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நீதிமன்றம் என்பதை நடைமுறைக்கு படிப்படியாகக் கொண்டு வரும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரத்தின் செசன்ஸ் கோர்ட் மதுரையில் இருக்கிறது அதன் காரணமாக நாங்கள் எல்லாம் மதுரைக்குப் போகவேண்டியிருக்கிறது, தற்போது இராமநாதபுரம் மாவட்டத்தை மூன்று பிரிவாகப் பிரிக்க அரசு அறிவித்து இருப்பதால், (குறுக்கீடு) ஸ்ரீவில்லிப்புத்தூரில் நல்ல கட்டிட வசதி இருப்பதால், அங்கே அந்த ஜில்லாக் கோர்ட்டை அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி, பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருக்கின்ற மாவட்டமான நீலகிரி மாவட்டத்திற்கு நீதிமன்றம் இல்லை என்ற குறை இருப்பதால், அரசு தற்போது முடிவு எடுத்து நீலகிரி மாவட்டத்திற்கு முதற்கண் தனியாக மாவட்ட நீதிமன்றம் அமைப்பது என்பதை அந்த மாவட்ட மக்களின் நலன் கருதி எடுத்து இருக்கிறது. புதிதாக மாவட்டங்களை ஏற்படுத்துகிற போது, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைக்கவேண்டும் என்பது அரசின் கொள்கை. அந்த அடிப்படையில் அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

1984 மார்ச் 16]

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: துணைத் தலைவர் அவர்களே, கரூரில் ஒரு டிஸ்டிரிக்ட் கோர்ட் அமையவேண்டும் என்று நீண்ட நாட்களாக பொதுமக்களும், வழக்கறிஞர்களும் கோரிக்கை வைத்து இருப்பதாலும், அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாலும் அங்கே ஒரு டிஸ்டிரிக்ட் கோர்ட் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, வழக்குரைஞர்கள் ஒரு கோரிக்கையை அரசுக்குத் தந்துள்ளார்கள்; உயர்நீதிமன்றத்திற்கும் தந்திருக்கிறார்கள். உயர்நீதிமன்றம் அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்தினுடைய பதில் அரசுக்கு வந்தபிறகு அந்த பரிந்துரையின் அடிப்படையில் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

திரு. மு. அப்பாதுரை: துணைத் தலைவரவர்களே, மாவட்ட நீதிமன்றம் ஒன்றை திருநெல்வேலி மாவட்டத்தில் அமைப்பதுபற்றி அறிவித்தார்கள். அந்த மாவட்ட நீதிமன்றம் தூத்துக்குடியில் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, தூத்துக்குடியில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்பது மக்கள் கோரிக்கையும் வழக்குரைஞர்கள் கோரிக்கையும் ஆகும். உயர்நீதிமன்றம் அதுபற்றி ஆராய்ந்து வருகிறது. உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை வந்த பின்னால் அரசு அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன்: துணைத் தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் 3 டிஸ்டிரிக்ட் கோர்ட்டுகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. காரணம் அவ்வளவு வேலை அங்கே இருக்கிறது. ஆகவே, அதற்கு முன்னுரிமை கொடுத்து விரைவில் நீதிமன்றத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவரவர்களே, மலைவாழ் மக்கள் நிறைந்திருக்கிற நீலகிரி மாவட்டத்திற்கு முன்னுரிமை; மக்கள் கோரிக்கை அதிகமாக வந்துள்ள நெல்லை மாவட்டத்திற்கு இரண்டாவது உரிமை தர அரசு ஏற்கெனவே முடிவு செய்திருக்கிறது. மாவட்ட நீதிமன்றம் இல்லாத நீலகிரி மாவட்டத்திற்கு தனி மாவட்ட நீதிமன்றம் அமைந்தவுடன் நெல்லை மாவட்ட நீதிமன்றம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, தூத்துக்குடியில் ஒரு மாவட்ட நீதிமன்றம் அமைப்பது பற்றி அரசு நடவடிக்கை எடுக்கும்.